**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ஆம் தேதி புதன்கிழமை**

**I.A.No.2/2026 in MCOP.No.143/2014**

1. சீரங்கன் (இறப்பு)
2. சீரங்காயி
3. முருகேசன்
4. கோவிந்தராசன்
5. மல்லிகா ...மனுதாரர்கள்

**/எதிர்/**

1. ஆறுமுகம்
2. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்
3. டாடா ஏ.ஐ.ஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ...எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில், காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன் படி, இறந்துபோன சீரங்கனின் வாரிசுகளை பிரதான மனுவில் தரப்பினர்களாக சேர்க்க ஏற்பட்ட 2400 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் : 02.04.2026

இறுதி விசாரணை நடைபெற்ற நாள் : 07.07.2026

உத்தரவு பகரப்பட்ட நாள் : 24.07.2026

மனுதாரருக்காக : திரு.P.G.செந்தில்குமார் - வழக்கறிஞர்

இரண்டாவது எதிர்மனுதாரருக்காக : திரு.A.நாகராஜன் - வழக்கறிஞர்

ஒன்று, மூன்று எதிர்மனுதாரர்கள் : தோன்றா தரப்பினர்கள்

1) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவில் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள். மேற்படி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் பிரதான மனுவின் மனுதாரரான சீரங்கனின் வாரிசுகள். மேற்படி சீரங்கன் கடந்த 06.12.2018-ம் தேதி அன்று இறந்துபோய்விட, பிரதான மனுவானது கடந்த 18.10.2019-ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னிட்டு, அசல் மனுவை கோப்பிற்கு எடுக்க மனுதாரர்கள் தரப்பில் காலதாமதத்தை மன்னிக்க மனு தாக்கல் செய்து, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், அசல் மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டும் எனவும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அசல் மனுவில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது. எனவே, இறந்துபோன சீரங்கனின் வாரிசுகளை பிரதான மனுவில் தரப்பினர்களாக சேர்க்க ஏற்பட்ட 2400 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேல்நடவடிக்கைக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **இரண்டாவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர்கள். முதல் மனுதாரர் விபத்து நடந்து ஆறு மாதங்கள் கழித்து தான் இறந்துபோய்யுள்ளார். அவரது இறப்பிற்கும் விபத்தால் ஏற்பட்ட காயங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முதல் மனுதார் வேறு ஏதேனும் ஒரு காரணத்தினால் இறந்திருக்கக்கூடும். இறந்துபோன சீரங்கனின் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்யவில்லை. மனுதாரர்களுக்கு இறந்துபோன சீரங்கனின் விபத்து சம்பந்தமான இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல. பிரதான மனுவானது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) **தீர்வு** :-

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவில் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள். மேற்படி

சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் பிரதான மனுவின் மனுதாரரான சீரங்கனின் வாரிசுகள். மேற்படி சீரங்கன் கடந்த 06.12.2018-ம் தேதி அன்று இறந்துபோய்விட, பிரதான மனுவானது கடந்த 18.10.2019-ம் தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னிட்டு, அசல் மனுவை கோப்பிற்கு எடுக்க மனுதாரர்கள் தரப்பில் காலதாமதத்தை மன்னிக்க மனு தாக்கல் செய்து, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், அசல் மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அசல் மனுவில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலாமல் போய்விட்டது. எனவே, இறந்துபோன சீரங்கனின் வாரிசுகளை பிரதான மனுவில் தரப்பினர்களாக சேர்க்க ஏற்பட்ட 2400 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேல்நடவடிக்கைக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன சீரங்கனின் வாரிசுகளான சேர்க்கப்பட வேண்டிய நபர்களுக்கு பிரதான மனுவை நடத்த ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவினை அனுமதிக்காவிடில் சேர்க்கப்பட வேண்டிய நபர்களுக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

8) **முடிவாக**, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.05 18:03:17 +0530

**சார்பு நீதிபதி,**

**குளித்தலை.**

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** :- இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.05 18:03:22 +0530

**சார்பு நீதிபதி,**

**குளித்தலை.**